**வன விலங்குகள் பாதுகாப்பு நிதியம் - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வன விலங்குகள் பாதுகாப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 67,212,382 தொகையான மீதி மீளாய்வாண்டின் போது கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கல், காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற கட்டிடங்களுக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 210,869,157 ஆக இருந்த போதிலும் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 143,656,774 ஆக ரூபா 67,212,383 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரியதாக நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற கட்டிடங்களுக்காக பணமாக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 210,869,157 தொகையாக இருந்ததுடன் தாமத வழுவினால் அதில் ரூபா 67,212,382 தொகை பூர்த்தி கட்டிடமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் மாத்திரம் பதியப்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது காசு வெளிப்பாய்ச்சல்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 13 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமாக காணப்படுகின்ற சொத்துக்கள் அவற்றின் சமமான தன்டையிலோ அல்லது செயற்படு தன்மையில் சமமானது என அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தும் நோக்கில் தொகுதிகளாக்கப்பட்டு காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், குரங்கு மனித பிரச்சினைகளை கட்டுப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 24,140,000 பெறுமதியான இரண்டு என்டஸ்கோப் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்கள் அலுவலக உபகரணங்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்களின் தொகுதியை மீளமைப்பதற்காக செலவிடப்பட்ட செலவினங்களின் காரணமாக சொத்து விடயங்கள் மற்றும் தொடர்புடைய எதிர்கால நலன்கள் அல்லது சேவைகள் நிறுவனத்திற்கு கிடைக்குமாயின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் அதிகரிப்பாக இனங்கண்டு மூலதனமாக்கப்பட வேண்டியிருந்த போதிலும், லுணுகம் வெஹர பூங்காவின் கறுப்பு பால மீளமைப்பிற்காக செலவிடப்பட்ட ரூபா 11,547,986 தொகை மூலதனமாக்கப்படாமல் மீண்டெழும் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 23 வழக்குகளுக்குரிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,700,000 தொகையினால் குறைவாகவும் 02 வழக்குகளுக்குரிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 65,000 தொகை இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவன கட்டமைப்பினை அபிவிருத்தி செய்யும் சொத்துக்களுக்காக, மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வை கணிப்பிடும் போது ரூபா 547,171 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பெறுமானத் தேய்வினை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1995 இன் 35 ஆம் இலக்க அளவிடல் அலகு நியமம் மற்றும் சேவை சட்டத்தின் 37 மற்றும் 43 ஆம் பிரிவுகள் | உடவலவ யானைகள் சரணாலயத்தில் இலைத் தண்டுகளின் நிறையை அளவிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட கைத்தராசு மற்றும் யானைக்குத் தேவையான பல்பகுதி இலை குழைகள் மரக்கறி மற்றும் பழங்களின் நிறைகளை அளவிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற இலத்திரனியல் தராசு என்பன சட்டத்தின் பிரகாரம் பரீட்சிக்கப்படாமலும் முத்திரை வைக்கப்படாமலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. | யானைகள் சரணாலயத்தில் உள்ள ஒவ்வொரு விலங்குகளுக்காகவும் ஒரு வேளை உணவிற்காக வழங்கப்பட வேண்டிய அளவை கணிப்பிடும் உள்ளக நடவடிக்கைகளுக்காகவே தராசு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதிலுள்ள பால தராசு மின்னல் தாக்கத்தினால் செயலிழந்து போனதன் பின்னர் கொண்டுவரப்பட்ட இலை தண்டுகளின் நிறையை அளவிடுவதற்காக அந்த தராசு பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதை அறியத்தருகின்றோம். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமானம் 137(2), (4), (5) ஆம் பிரிவுகள் | வழங்கல் தொடர்பான செலவினங்களை அங்கீரிக்கும் போது உரிய வழங்கல்கள் குறித்த பிரமாணங்களில் காணப்பட்டமையை பரிசோதனை செய்து சரியாக கையேற்கப்படுகின்றமையை அங்கீரிக்கும் உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதற்கு முரணாக உடவலவ யானைகள் சரணாலயத்தில் இலைத் தண்டுகளை கொள்வனவு செய்வதற்காக முறையற்ற திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அண்ணளவான நிறை அறிக்கையின் அடிப்படையில் ரூபா 8,896,827 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உடவலவ யானைகள் சரணாலயத்தில் பாலம் தராசு ஆரம்பம் முதல் மின்னல் தாக்கத்தினால் செயலிழக்கும் வரை மெய்மையாய்வு செய்யப்பட்டுள்ளது. அதனை பழுதுபார்க்கும் வரை தேவைகளுக்காக அந்த நிலையத்தில் உள்ள தராசு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், தற்போது பாலம் தராசினை பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவு. | ரூபா 500,000 பெறுமதியினை விஞ்சிய பொருட்களினதோ அல்லது சேவைகளினதோ ஒப்பந்தம் முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதப்பட்டு கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,366,000 தொகையான நீச்சல் மற்றும் சுழியோடி உபகரணங்களை கொள்வனவு செய்த கம்பனியுடன் எழுத்து மூல உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | இதன் போது SABCCO கம்பனியுடன் உடன்டிக்கை செய்யப்படாதிருந்த போதிலும், உரிய பொருட்களின் பெறுமதியில் 10 சதவீதம் ஆன ரூபா 136,600 தொகை பிணைப் பணமாக வைப்புச் செய்யப்பட்டிருந்தமையை அறியத்தருகின்றோம். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 யூன் 13 ஆம் திகதிய 01/2018(i) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | சகல அரசாங்க நிறுவனங்களினாலும் வழங்கப்படுகின்ற பல்வேறு சேவைகளுக்காக தற்போது அறவிடப்படுகின்ற கட்டணத்தை 15 சதவீதத்தினால் அதிகரித்து வைக்கப்பட வேண்டும். எனினும் 2006 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1433/4 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் தேசிய ஒதுக்கப் பிரதேசம் அல்லது அபயமளிக்கப்பட்ட பூமியில் அமைந்துள்ள நீர்த்தேக்கங்களில் மீன் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற மீன் பிடி வள்ளங்களுக்காக அறவிடப்படுகின்ற ரூபா 250 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானி பத்திரத்தை திருத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தமையினால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2002 பெப்ரவரி 11 ஆம் திகதிய 16/2002 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கையின் 1.1 மற்றும் 1.2 ஆம் பந்திகள் | தேசிய பூங்காக்களில் உள்நுழைவு பத்திர வருமானங்களை அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணங்கள் பதவியணியினர்களுக்கு இடையே பகிர்ந்தளிக்கும் போது சம்பளமற்ற விடுமுறை தினம் 01 முதல் 10 நாட்கள் வரை பெறப்பட்ட பெறுமதியில் 10 சதவீதம் மற்றும் 11 நாட்களுக்கு மேற்பட்ட சம்பளமற்ற விடுமுறை பெற்றவர்களிடம் இருந்து 50 சதவீதம் ஆக குறைக்கப்பட்டு கிடைக்கின்ற சேவைக் | 2020 ஆம் ஆண்டில் சேவைக் கட்டணங்கள் ஆலோசனை குழுவின் ஊடாக வன விலங்குகள் பாதுகாப்பு நிதியத்திற்கு செலவில் வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கட்டணங்களான வன விலங்கு பாதுகாப்பு நிதியத்திற்கு மீண்டும் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 14 உத்தியோகத்தரிடம் இருந்து குறைக்கப்பட்ட ரூபா 1,829,200 தொகையான பணத்தை செலவில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 282,296,192 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,282,370,046 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,564,662,238 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நிதியத்தின் வருமானமான பூங்கா நுழைவுக் கட்டணம் ரூபா 1,422,924,461 இனாலும், சேவைக் கட்டணங்கள் ரூபா 231,970,231 இனாலும் மற்றும் பூங்காக்களில் வாகன உள்நுழைவுக் கட்டணம் ரூபா 51,449,395 இனாலும் வீழ்ச்சியடைந்தமையும், இயந்திர உபகரணங்கள், மின்சார உபகரணங்கள், கட்டிட பராமரிப்பு செலவினம் ரூபா 29,120,712 இனாலும் மற்றும் மின்சார வேலி பராமரிப்பு மற்றும் பராமரிப்பு ஊழியர் கொட்டகைகளுக்காக தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்யும் செலவினங்கள் ரூபா 48,684,848 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் செயற்பாட்டு திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட 28 பணிகளுக்காக ரூபா 367,357,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அமுல்படுத்தப்பட்ட 18 செயற்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் 50 சதவீதத்தினை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக இந்த செயற்திட்டங்களை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்கான இயலுமை காணப்படாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட பணிகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட மூழ்கிய கப்பல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட உயிரியல்சார்ந்த பகுப்புப் பொருள் பற்றி நடாத்தப்பட்ட பன்முக ஆய்வு (2019) (biodiversity survey and declaration of ship wrecks) செயற்திட்டத்தை செயற்படுத்துவற்கு ரூபா 2,956,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தில் திட்டமிடப்பட்ட நீச்சல் உபகரணங்கள் சகலதும் 2019 மார்ச் 31 ஆம் திகதியளவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மூழ்கிய கப்பல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட உயிரியல்சார்ந்த பகுப்புப் பொருள் பற்றி நடாத்தப்பட்ட பன்முக ஆய்வு 2019 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துதல் வளப் பங்களிப்பாளரை வழங்குவதில் காணப்பட்ட கஷ்ட நிலைமையின் காரணமாக முடியாதிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் போது covid - 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக உரிய செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | செயற்திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |